நீண்ட நாட்களாக. மத்திய அரசாங்கத்திலே விரைவுபடுத்தும் திட்டத்தின் கீழே இந்த ஆண்டில் அவர்கள் அதிக நிதியை ஒதுக்கி விரைவிலே அந்த தளம் அமைக்கப்பட்டு அந்த விமானங்கள் வந்து இறங்கிச் செல்வதற்கு ஏற்பாடுகள் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, நம்முடைய மாநில அரசின் சார்பில் நிலம் கையகப்படுத்துவது, பாதைகள் அமைப்பது, குடி தண்ணீர் வசதி, மின்சார வசதி அத்தனை ஏற்பாடுகளையும் நாம் செய்துகொண்டிருக்கிறோம். இந்தப் பணியை விரைவுபடுத்த வேண்டும் என்பதுதான் நம்முடைய அரசின் நோக்கம். எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்துப்படி விரைவில் இப்பணியை முடிக்க வேண்டுமென்று ஏர்போர்ட் அத்தாரிட்டியை நம்முடைய மாநில அரசு வலியுறுத்தும்.

கடையத்தை மையமாக வைத்துப் பேருந்துகள் இயக்குதல்.

* 7127—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், கடையத்தை மையமாக வைத்து பேருந்துகளை இயக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இல்லை.

திரு. கே. ரவி அருணன்: தலைவர் அவர்களே, கடையம் என்பது ஒரு ஊராட்சி ஒன்றியத்தின் தலைமையிடமாகும். ஆகவே, கடையத்தை மையமாக வைத்து நகரப் பேருந்துகள் இயக்காமல் இருப்பதால் அதைச் சுற்றியுள்ள பல்வேறு கிராமங்களுக்கு நேரடியாக பேருந்து வசதி செய்ய முடியாத சூழ்நிலை இருந்து வருகிறது. ஆகவே இந்த அரசு இந்த முடிவை மறு பரிசிலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, தற்போது தென்காசி, சுருண்டை, ஆலங்குளம், அம்பாசமுத்திரம், விக்கிரமசிங்கபுரம், பாபநாசம், பாவூர்சத்திரம், முக்கூடல் போன்ற ஊர்களுடன் கடையம் நகரப் பேருந்துகளால் தொடர்பு படுத்தப்பட்டுள்ளது. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று கடையத்தை நகரப் பகுதியாக அறிவித்து பேருந்து தொடர்புகளால் இணைக்கப்பட வேண்டுமா என்பதைப் போக்குவரத்துத் துறை பரிசீலனை செய்யும்.

திரு. கே. ரவி அருணன்: தலைவர் அவர்களே, கடையம் பேருந்து நிலையத்தில் ஏற்பட்டுள்ள போக்குவரத்து நெருக்கடியைப் போக்கி அந்தப் பேருந்து நிலையத்தை விரிவுபடுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, அந்தப் பேருந்து நிலையத்தை ஊராட்சி மன்றம் நடத்துகிறதா அல்லது ஊராட்சி ஒன்றியம் நடத்துகிறதா என்பது பற்றி எனக்குத் தெரியாது. அது உள்ளாட்சித் துறையுடையது. அவர்களுடைய மானியம் இன்றைக்கு விவாதத்திற்கு வருகிறது. உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் அளிப்பார்கள்.

திருமதி ரமணி நல்லதம்பி: தலைவர் அவர்களே, இப்படி ஒரு இடத்தை மையமாக வைத்துப் பேருந்துகளை இயக்க அனுமதிக்கின்ற அதிகாரம் யார் கையில் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: தலைவர் அவர்களே, ஒவ்வொரு பேரூராட்சிப் பகுதியும், நகரப் பகுதியாக அறிவிக்கப்பட்டு அந்த இடத்திலிருந்து பேருந்துகள் புறப்பட்டுச் செல்வதற்கான அதிகாரத்தை அரசுதான் அறிவிக்க வேண்டும்.

சுற்றுலா மையமாக்குதல்

* 5293—திரு. மொஞ்சனூர் ப. ராமசாமி

மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பவானி—காவிரி ஆறுகள் கலக்கும் பவானி கூடுதுறையையும் அருகிலுள்ள அணைத் தோப்பையும் சுற்றுலா மையமாக்க அரசு திட்டம் மேற்கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?